தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 7-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தோல், முடி, அழகியல் சிகிச்சை முகாம் நடைபெற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் டாக்டர். தாஜ் லேசர் கிளினிக், கோயம்புத்தூர் இணைந்து பல்கலைப் பணியாளர்கள் மற்றும் மாவர்களுக்கான இலவச ரோதல், முடை, அழகியல் சிகிச்சை முகாம் பல்கலைக மருத்துவமனை வளாகத்தில் 5-12-2015 அன்று நிகழ்த்தியது.

மருத்துவர்கள் சி.பி. தாஜுதீன், கே. ஜோதி மற்றும் பிரியதர்சினி அடங்கிய குழு 350க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் பணுணை தொழிலாளர்களுக்கு தோல் மற்றும் முடியின் நலத்தைக் கண்டறிந்தனர்.

கணிணியின் மூலம் பொடுகு பரிசோதனை மற்றும் முடியின் உறுதி போன்ற பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. முகப்பரு, கரும்புள்ளிகள், தேமல், முடி உதிர்தல், சுருக்கம், தேவையற்ற முடி நீக்கம், மரு ஆகியவற்றுக்கு பரிசோதித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. லேசர் சிகிச்சையில் முன்னோடியாக திகழ்வதால் அது குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டது. 5-6 அமர்வுகளில் தேவையற்ற முடி வளர்ச்சியை நிரந்தரமாக நீக்கலாம் என்று எடுத்துரைத்தனர்.

மேலும் பணியிடம் மற்றும் கல்லூரிகளில் ஏற்படும் மன ஆழுத்தம் மற்றும் உணவுக் கட்டுப்பாடு இல்லாமையே தோல் நோய் மற்றும் முடி உதிர்தலுக்கு முக்கிய காரணம் என்பது வலியுறுத்தப்பட்டது. எனவே பழங்கள், காய்கறிகள், முளை கட்டிய தானியங்கள் ஆகியவற்றை உட்கொண்டு வெற்றுணவு, துரித உணவுகளைத்

தவிக்குமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மற்ற உறுப்புகளைப் போல் தோலுக்கும், முடி வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கபட வேண்டும் என்பது அறிவுறுத்தப்பட்டது.

முகாமில் பல்கலைக்கழக மருத்துவர் டாக்டர். அ. அருள்மொழி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் மற்றும் தாஜ் கிளினிக் பொதுத் தொடர்பு அலுவலர் திரு. கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்